**கவனிக்க.**-05.10.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2093 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2093 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2090 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2087-B 81457-5,403 (2018/10)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பற்றிய அமைச்சு

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவைத் தொகையின் தொழில்நுட்ப அலுவலர் பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

இத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையின் தொழில்நுட்ப அலுவலர் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு (சிவில்/இயந்திரவியல்) தகைமையானவர்களைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2018.11.12 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதமோ தபாலில் காணாமல் போதல் அல்லது காலதாமதமடைதல் என்பன தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை காலதாமதம் செய்வதன் மூலம் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சை ஒன்றினதும் பொது நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் உயர் புள்ளிகளின் அடிப்படையிலும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கும் ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுடையோர் தெரிவு செய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்குரிய சான்றிதழ்களின் சரிநிலைத்தன்மை மட்டும் பரீசிக்கப்படும்.)

2. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.-

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாகப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்தப் பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கு இணங்க 05 வருடகாலத்தினுள் அரச கரும மொழிகள் தொடர்பான உரிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்த நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

(v) குறித்துரைக்கப்படுகின்றவாறு இந்தத் திணைக்களத்திற்கு உரித்தான எந்தவொரு தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய, 03/2016 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப, MN-3-2016 ரூபா 31,040-10×445 - 11× 660-10×730-10×750- ரூபா 57,550 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். அந்த சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

4. (i) **கல்வித் தகைமைகள் :**

(1) க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் எல்லாமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(2) க. பொ. த. (உ/ த) பரீட்சையில் துறைக்குரித்தான இரண்டு பாடங்களுடன் விஞ்ஞான/ கணிதப் பிரிவின் கீழ் எல்லாப் பாடங்களிலும் (பொது உளச்சார்பு தவிர்ந்த) ஒரேமுறையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்).

(ii) **தொழில் தகைமைகள் :**

(1) மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா;

அல்லது

(2) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா;

அல்லது

(3) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா;

அல்லது

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை சிறப்பாக நிறைவு செய்திருத்தல்;

அல்லது

(6) தொழில் துறைக்குரிய தேசிய தொழில் தகைமை (NVQ) 06 ஆம் மட்டத்தின் தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்;

அல்லது

(7) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேற்குறித்த தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்பவியல் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடல் தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **வேறு தகைமைகள்.-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி சிறந்த குணநலன்களைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று, விண்ணப்பதாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான எல்லா தகைமைகளையும் சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. (i) **எழுத்துப் பரீட்சை:-**

| வினாப்பத்திரம் | நேரம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளி | சித்தியடைய வேண்டிய புள்ளி | விடயப் பரப்பு |
|---|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 01 | 100 | 40% | சமகால, சமூக நிகழ்வுகள் தொடர்பான புரிதல், சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் புத்தாக்கச் சிந்தனைத் திறன், சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் என்பவற்றைக் கணிப்பிடுவதற்கான சுருக்க வினாப் பத்திரம் |
| தொழில்நுட்பவியல் மற்றும் விடயஞ்சார் பரீட்சை | 03 | 100 | 40% | பதவிக்கு உரித்தான தொழில்நுட்பவியல் அறிவைப் பரீட்சிப்பதற்குத் தயாரிக்கப்பட்ட 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். |

(ii) **பொது நேர்முகப் பரீட்சை.-** புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்கு இயைபாகப் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் தொடர்பாக பரீட்சிப்பதற்கு மாத்திரமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள்:-**

(i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ எந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன்பொருட்டு

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ; அல்லது
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிமூலங்களில் மாத்திரம் நடத்தப்படும் என்பதுடன், விண்ணப்பிக்கப்படும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(v) விண்ணப்பங்களை கோருகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் எனும் எடுகோளுக்கேற்ப உரிய பணத்தைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படமாட்டாது.

(vi) பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும்.

(vii) இந்தப் பரீட்சையானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பு பரீட்சை மத்திய நிலையத்தில் மாத்திரம் நடத்தப்படும்.

10. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை:-**

(i) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப, இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 08 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்கள் அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து, தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்;

(ii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்கள் அல்லது முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் அல்லது இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும் போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆக இருப்பதோடு, அக்கட்டணமானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கு இலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைக் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றையும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது சிறந்ததாகும். எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், ரூபா 498,960 அல்லது அதற்கும் அதிகமான வருடாந்த திரட்டிய சம்பளத்தை (அ. நி. சு. 3/2016 இன் 1 ஆம் அட்டவணைக்கு ஏற்ப) பெறுகின்ற அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை அலுலர் ஒருவர் அல்லது பௌத்த விகாராதிபதி ஒருவர் அல்லது தலைமைத் தேரர் ஒருவர் அல்லது ஏனைய வணக்கஸ் தலமொன்றுக்குப் பொறுப்பான விசேட நிலையிலுள்ள மதபோதகர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களத் தலைவருடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(vii) பதவியில் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவலொன்று போலியானதென தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ. என். கே. மலலசேகர,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு10,
2018, செத்தெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2018**

பரீட்சைக்குத் தோற்றும் துறை : சிவில் [ ] இயந்திரவியல் [ ]

பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் : சிங்களம் - 1 [ ] தமிழ் - 2 [ ]

1. விண்ணப்பதாரியின் பெயர் :-
 (i) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
 (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
 (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (பெண்/ஆண்) :----.

7. குடியியல் நிலை (விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை) :----.

8. கல்வித் தகைமைகள்:
க. பொ. த. (சா./த.) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ./த.) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. தொழில் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|
| | | |

11. நீங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பிலா/ பதிவின் மூலமா என்பதை குறிப்பிடவும். (பதிவின் மூலம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

12. நீங்கள் அரச பதவியொன்றை வகித்து அதிலிருந்து நீக்கப்பட்டவரா? :----.

13. தற்போது அரச சேவையில் உள்ள ஒருவரெனில் உங்களுக்கு எதிராக திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணை ஏதேனும் உள்ளதா? :----.

14. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி

பற்றுச்சீட்டு கழன்று விடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் எவையேனும் போலியானவை அல்லது பிழையானவை என, நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ...... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதியானது அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும்)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் அத்தாட்சி**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................. அவர்கள், தற்போது ........... பதவியில் சேவையாற்றுகிறார் என்றும் அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை என்றும் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை என்றும், அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கருத்து இல்லை என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.
(பதவி முத்திரை)

10-307

## விவசாயத் திணைக்களம்

### விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான 1 1/2 வருட தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (NVQ Level - 05 ) மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2018 திசெம்பர்

விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய தொழில்சார் தகைமை மட்டம் - 05 (NVQ Level-05) தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு 2019/ 2020 ஆம் கல்வி ஆண்டுக்காக (மாணவர்களை/ பயிலுநர்களை) சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைகள் பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதான நகரங்கள் சிலவற்றில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. மேற்படி டிப்ளோமா பாடநெறியானது விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் விவசாயக் கல்லூரிகளில் நடாத்தப்படும்.

2.1 விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியானது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் அதிகூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் விவசாயக் கல்லூரிகளில் காணப்படும் வசதிகளுக்கமைய போதுமான எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படுவர். இதன்போது போட்டிப் பரீட்சையில் கூடிய கூட்டுப் புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் புள்ளிப் பட்டியலின் அடிப்படையில் வதிவிட வசதியுடன் பாடநெறியினை தொடர்வதற்காக தெரிவு செய்யப்படும் அதேவேளை பெற்றுக்கொண்ட கூட்டுப் புள்ளிகளின் பட்டியலின் அடிப்படையில் முடியுமாயின் விவசாயக் கல்லூரியினுள் காணப்படும் ஏனைய வசதிகளுக்கேற்ப வதிவிட வசதி வழங்கப்படாத அடிப்படையின் கீழும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.2 பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தகைமையைப் பரிசோதிப்பதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு, அதற்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 இப்பயிற்சி நெறியானது ஆங்கில மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

2.4 இப்பயிற்சிநெறி தங்குமிட வசதியுடன் கூடிய முழு நேரப் பயிற்சிநெறியாகும். அனைத்து பயிலுனர்களும் பயிற்சிக் காலத்தின் போது கட்டாயமாக விடுதியில் தங்கி பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2.5 இப்பாடநெறியானது ஒன்றரை (1 1/ 2) வருட கால எல்லையை கொண்டது. பயிற்சி நிறுவனத்தின் ஒரு வருட பயிற்சியின் பின்னர், தேசிய பயிலுநர் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ், பெயர் குறிப்பிடப்படும் நிறுவனத்தில் ஆறு (06) மாத காலத்திற்குத் தொழிற் பயிற்சியை கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.6 மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் பயிலுநர்கள் நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு, தேர்ச்சி அடைபவர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் - 05 (NVQ Level - 5 ) மட்டத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

2.7 இச்சான்றிதழ் விவசாயத் திணைக்களம் உட்பட ஏனைய விவசாய தொடர்புடைய அரச நிறுவனங்களில் தொழில்நுட்ப உதவியாளர் மட்டத்திலான தொழில் வாய்ப்புகளிற்கான தகைமையாகக் கருதப்படும்.

3. **பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1 க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தியுடன் ஆங்கிலப் பாடத்தில் சாதாரண சித்தியும் உள்ளடங்கலாக 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இதன் போது ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்).

அத்துடன்

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருக்க வேண்டும். (உயர் தரத்தில் கணிதப் பிரிவைப் பயின்ற மாணவர்கள் இரசாயனவியல் அல்லது பௌதீகவியலில் சித்தியடைந்திருப்பது இப்பாடநெறியினை தொடர்வதற்கு தெரிவு செய்யப்படுவதற்கான ஒரு தகைமையாகக் கருதப்படமாட்டாது.)

அல்லது

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் உயிர் தொழில்நுட்பவியல், தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களை பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களை பயின்று அதில் ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் கல்வி பயின்று விவசாயப் பாடத்தினை கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

விண்ணப்பதாரிகள் 17 வயதுக்குக் குறைந்தவர்களாகவோ அல்லது 25 வயதுக்கு மேற்பட்டவர்களாகவோ இருத்தல் கூடாது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று மேற்குறித்த சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விவசாயத் துறையுடன் தொடர்புடைய பின்வரும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level-4 ) பாடநெறியைப் பயின்று மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி, ஆணைக்குழுவால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகள் மட்டம் 4 இல் (NVQ - 4 ) சான்றிதழைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
- தோட்ட அலங்கார கலைஞர்

அல்லது விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமைகள் மட்டம் 4 இல் (NVQ -4 ) வேறு பாடநெறியொன்றை பயின்றிருத்தல்.

மேற்கூறிய தேசிய தொழில்சார் தகைமை 4 மட்டத்தில் (NVQ Level - 4 ) பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்.

க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்கள் உள்ளடங்கலாக 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (இதன் போது ஒரு அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

இவ்விதம் பயிற்சிநெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் 10% சதவீதமே ஆகும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரிகளின் வயது 17 வயதிற்குக் குறைவாகவோ 35 வயதிற்கு மேற்பட்டோ இருத்தல் கூடாது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று மேற்குறித்த சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**4. பாடநெறிக்கு விண்ணப்பித்தல் :**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய விண்ணப்பதாரியின் கையெழுத்திலோ அல்லது தட்டச்சிலோ அல்லது கணினியிலோ 8 " x 12 " அளவுள்ள (A 4 அளவுள்ள) கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தனது விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள முடியும். (விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்கும் போது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்.) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 09

வரை முதல் பக்கத்திலும், 10 முதல் 13 வரை இரண்டாவது பக்கத்திலும், 14 முதல் மிகுதி 3 ஆம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இல்லாது நிராகரிக்கப்படும். தாம் நிரப்பும் விண்ணப்பப்படிவத்தினை இவ்வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 700.00 ஆகும். விண்ணப்பதாரியினால் மக்கள் வங்கியில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 057100179027204 கொண்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 700.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

4.3 அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் மாத்திரம் 2018.11.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் பிந்திக் கிடைக்கும் அல்லது காணாமற் போகும் விண்ணப்பங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "2019/20 ஒன்றரை (1 1/2) வருட விவசாய டிப்ளோமா பாடநெறிக்கு அனுமதி பெறல்" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள் :**

2019/ 2020 விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு மாணவர்களை அனுமதிக்கும் போட்டிப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் மூலம் சிங்களம், தமிழ் மொழிகளில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் பின்வரும் நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

| நகர இலக்கம் | நகரம் |
|---|---|
| 1 | கம்பஹா |
| 2 | அம்பாறை |
| 3 | தம்புள்ளை |
| 4 | காலி |
| 5 | அம்பாந்தோட்டை |
| 6 | குருநாகல் |
| 7 | கண்டி |
| 8 | வவுனியா |
| 9 | அநுராதபுரம் |

குறிப்பிட்டதொரு பரீட்சை நிலையத்திற்கு போதியளவான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து. விண்ணப்பதாரியின் இரண்டாவது தெரிவிற்கமையவோ அல்லது விண்ணப்பித்துள்ள நிலையத்திற்கு அருகில் உள்ள வேறு ஒரு பரீட்சை நிலையமோ அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள நகரம்/நகரங்களையோ, போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழியையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

6. **பரீட்சை முறைமை :**

6.1 போட்டிப் பரீட்சைக்கான பாடங்களும் நேர அட்டவணையும் கீழே தரப்பட்டுள்ளன.

***பாடங்கள்***

முதலாம் வினாத்தாள் (01) விவசாயம் (100) காலம் - 1 மணித்தியாலம்

6.1 க. பொ. த. (சா.த.) விவசாய பாடவிதானத்திற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்களடங்கியது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

இரண்டாம் வினாத்தாள் (02) விவேகப் பரீட்சை (100) காலம் 1 மணித்தியாலம்

(ஒழுங்கமைப்பு , எதிர்வு கூறல், தொடர்பு காணல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்கள் மதிப்பிடப்படும் பல்தேர்வு மற்றும் சுருக்க வினாக்கள் 50 இனை கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

6.2 இங்கு 3.1, 3.2 ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் விவசாயத் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரங்களை அஞ்சல் செய்தவுடன் அது தொடர்பான விளம்பரமொன்று விவசாயத் திணைக்களத்தினால் தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இவ்விளம்பரத்தினை பிரசுரித்து 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காதவர்கள் அனுமதிப் பத்திரத்தை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு, கீழே அ, ஆ, இ ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளுடன் விவசாயத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் (பரீட்சை) இற்கு உங்களது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாமை தொடர்பாக அறியப்படுத்தல் பிரயோசனமானதாக அமையும்.

(அ) விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி
(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டினது நிழற் பிரதிகள்
(இ) விண்ணப்பத்தினை அனுப்பிய பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டின் நிழற் பிரதிகள்

6.3 போட்டிப் பரீட்சையின் விண்ணப்பதாரிகளினால் பெறப்பட்ட புள்ளிகள் திணைக்கள இணைய வலைத்தளத்தில் வெளியிடப்படும். மேற்குறிப்பிட்ட இரண்டு பாடங்களினதும் கூட்டுத் தொகையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரி ஒருவரை எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதானது அவர் பாடநெறியில் இணைத்துக்கொள்வதற்கான தகைமையினை பெற்றுள்ளார் எனக் கருதுப்படக் கூடாது. பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படும்.

6.4 எழுத்துப்பரீட்சைக்கு அல்லது நேர்முகப்பரீட்சைக்கு அல்லது இவ்விரண்டிற்கும் தோற்றுவதற்கு அரசாங்கத்தினால் எந்தவிதமான படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

கலாநிதி டபிள்யு. எம். டபிள்யு. வீரகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான NVQ - 5 மட்டத்திலான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு 2019/2020 கல்வியாண்டுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சை - 2018, திசெம்பர்**

**National Diploma in Agricultural Production Technology Course (NVQ Level - 05) in Department of Agriculture for Academic year - 2019-2020**
**Competitive Examination Adimission - 2018, December**

| |
|---|
| |

அலுவலக உத்தியோகத்தருக்கு மாத்திரம்

| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | அந்நகரின் இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு : ............................... <br> 2 ஆம் தெரிவு : ............................... <br> 3 ஆம் தெரிவு : ............................... | ................ <br> ................ <br> ................ |

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பகுதிக்கு அமைவாக)

2.

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி | |
|---|---|
| சிங்கள மொழி – 2 <br> தமிழ் மொழி – 3 | |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3. ஆண்/பெண் :

| ஆண் | - 0 |
|---|---|
| பெண் | - 1 |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

4. (அ) (i) முதலெழுத்துக்களை கடைசியில் இட்டு முததெழுத்துக்களுடன் பெயர் (தமிழில் தெளிவான எழுத்தில்) :----.
(ii) முதலெழுத்துக்களை இறுதியில் குறிக்கப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில Capital எழுத்தில்)
(உ+ம்) : ANANDA K.C.B.:----.
(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில Capital எழுத்தில்) :----.

5. (i) முழுமையான முகவரி :----.
(ii) அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முழுமையான முகவரி : (ஆங்கில Capital எழுத்தில்) :----.
(iii) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :-

(i) நிலையான தொலைபேசி

(ii) கையடக்க தொலைபேசி

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

7. (அ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (தமிழில்):----.
(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :----.

8. பிறந்த திகதி : வருடம் : மாதம் : திகதி :

9. 2018.11.12 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : மாதங்கள்: நாட்கள்:

10. கல்வித் தகைமைகள் வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கட்டாயமாக வாசித்து இப் பக்கத்தினை நிரப்பவும்.

(அ) இந்த அறிவித்தலில் 3.1 ஆம் பந்திக்கமைய க.பொ.த. (சா.த.) சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள்:

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. ஆங்கிலம் | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ஆ) க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள்:

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(இ) மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளை உறுதிப்படுத்த கல்விச் சான்றிதழின் நிழற்பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். மூலப் பிரதிகளை அனுப்பத் தேவையில்லை. மேலும் விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பவும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சையின் போது கருத்தில் கொள்ளப்படும். கல்விச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா?:............

11. NVQ மட்டம் 4 பாடநெறியினை பயின்று தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது.
பயின்ற NVQ மட்டம் 4 தொடர்பான விபரங்கள் :

(அ) பாடநெறியின் பெயர் :............
(ஆ) பாடநெறியினை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் :............
(இ) NVQ தகைமை பெற்ற வருடம் :............
(சான்றிதழ்களின் நிழற்பட பிரதியை இத்துடன் இணைக்கவும்)

12. உயிரியல் அல்லது தொழில்நுட்பவியல் பிரிவில் கற்று தகைமையுள்ள தொழில்சார் தகைமை மட்டம் 04 இலும் (NVQ - 4) தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கீழ்வரும் பகுதி ஏற்புடையதாகும்.

நீர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்ப்பது கீழே தரப்பட்டுள்ள தகைமைகளில் எத்தகைமையின் கீழ் என்பதனை குறிப்பிடவும். (உரிய ஒரு கூட்டில் மாத்திரம் புள்ளியிடுக.)

NVQ 4- பாடநெறியின் தகைமைகளுடன் ☐
உயர் தரப் பரீட்சை தகைமைகளுடன் ☐

13. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :............
14. பரீட்சைக் கட்டணம் தொடர்பான விபரங்கள்:

14.1 விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் 057100179027204 எனும் கணக்கு இலக்கத்திற்கு மக்கள் வங்கியில் வரவிலிட்டுப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :............
14.2 பணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :............

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் பசையால் ஒட்டி விடவும்.
பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை கட்டாயமாக தம்வசம் வைத்துக் கொள்ளவும்.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதோடு தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் வேறொரு பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றுள்ளதுடன் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியும் பெற்றுள்ளேன். அத்துடன் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில்/ தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது விவசாயக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படுவதற்கான தகைமைகளை இழப்பேன் என்பதையும் அறிவேன். இப்பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கின்றேன்.

----,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல் :**

*(திணைக்களத் தலைவர் ஒருவரினால் அல்லது பாடசாலை அதிபர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவானால், அல்லது சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 2,40,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் நிரந்தர அரசாங்க அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)*

மேலே கையொப்பமிட்ட திரு./திருமதி/செல்வி ................................. என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா.த.), க. பொ. த. (உ.த.) தகைமைகளைப் பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும் பரீட்சித்து பொறுப்புடன் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
தகைமைகளை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.
பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

*10-1278*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.